ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் :07/2020

எனது இலக்கம்:ஓய்வூதியம்/சுற்றறிக்கை/2020
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2020.06.11

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்களுக்கு,

**<u>ஓய்வூதியம் பெறுநர்கள் ஓய்வூதியம் பெற முடியாத சந்தர்ப்பங்களில் பாதுகாவலர் ஒருவரை நியமிப்பது தொடர்பான ஒப்பந்தம்</u>**

ஓய்வூதியத்தை பாதுகாவலர் ஒருவருக்கு செலுத்த வேண்டி ஏற்படும் சந்தர்ப்பங்களில் அச்செயற்பாட்டினை சரியாகவும் மிக நம்பகத்தன்மையுடனும் நிறைவேற்றும் நோக்கில் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், ஆயுதப் படை ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஆயுதப் படை ஓய்வூதியத் திட்டத்தின் ஆகியவற்றின் கீழ் ஓய்வூதியம் / பணிக்கொடை / ஓய்வூதிய நிலுவை / நிலுவைப் பணிக்கொடை அல்லது கொடுப்பனவு போன்ற நலனொன்றினை அல்லது நலன்களைப் பெறும் ஓய்வூதியர் அல்லது கிடைக்கப் பெறவுள்ள அரச உத்தியோகத்தர் கடுமையாக நோய்வாய்ப்படுதல் / சித்தசுவாதீனமற்றவராதல் / அங்கவீனமுறல் அல்லது முதுமையடைதல் போன்ற காரணங்களினால் மேற்குறித்த நலன்கள் அல்லது நலனொன்றினைப் பெறும் வகையில் வருகை தர வேண்டிய சந்தர்ப்பத்தில் பாதுகாவலருக்கு அல்லது நிறுவனத்துக்கு ஓய்வூதியத்தை அல்லது அதன் ஒரு பகுதியை செலுத்தும் வகையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

03. அவ்வாறு பாதுகாவலருக்கு ஓய்வூதியம் செலுத்துகையில் ஓய்வூதியம் பெறுநருக்கு அதிகபட்ச நலன்கள் கிடைக்கும் வகையில் அல்லது செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தை மூன்றாமவர் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக பதுகாவலரை நியமிக்கும் சந்தர்ப்பத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்த இலக்கம் 01, 02, 03, 04, 05, 06 மற்றும் 07 இன் படி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

04. மேற்குறிப்பிட்டதன் பிரகாரம் குறித்த ஒப்பந்தத்தை பூரணப்படுத்தும் பணியை தற்சமயம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் 2020.07.31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளல் வேண்டும் என்பதோடு இதற்குப் பின்னர் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறும் போது அல்லது ஒரு பாதுகாவலர் ஒருவரை நியமிக்க வேண்டி இருக்கும் போது சந்தர்ப்பத்திற்கேற்ப தமக்குரிய ஒப்பந்தத்தை பூரணப்படுத்துதல் வேண்டும்.

**ஏ. ஜகத் டீ. டயஸ்**

**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்:-

1. சனாதிபதிச் செயலாளர் - தயவுடன் அறிந்து கொள்வதற்காக.
2. பிரதமரின் செயலாளர் - தயவுடன் அறிந்து கொள்வதற்காக.
3. செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தயவுடன் அறிந்து கொள்வதற்காக
4. செயலாளர், நிதியமைச்சு - தயவுடன் அறிந்து கொள்வதற்காக.
5. கணக்காய்வாளர் நாயகம் - அவசியமான நடவடிக்கைக்காக.